# வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
## WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE

Girraween Public School, 9 Bando Road Girraween NSW 2145

# ஆண்டு 8 - பேச்சுப் போட்டி

**போட்டி நடைபெறும் திகதி: 19.05.2018 (5.00 pm)**

---

**நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.**

## தாய் மொழியே வாய்மொழியாம்.

நான் யார்? இந்தக் கேள்வியைக் கேட்டால், இன்று எங்களில் பலர் தங்களை புலம் பெயர் தமிழர் என்று அடையாளம் காண்போம். புலம் பெயர்ந்து வாழும் நாங்கள் கல்வி மற்றும் உத்தியோகத் தேவைக்காக ஆங்கிலத்தில் புலமை பெறுவதில் கவனம் செலுத்துகிறோம். தமிழில் பேசுவது இதற்கு இடையூறு என்று கருதுகிறோம். பெற்றோரும் இதற்கு ஆதரவளித்து தங்கள் பிள்ளைகளைத் வழி நடத்துகிறார்கள்.

பல ஆய்வுகள் பன்மொழி கற்றலின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுகின்றன. இளவயதில் குழந்தைகளுக்கு குறைந்தது ஐந்து மொழிகளில் குழப்பமின்றி பேசும் திறமை உண்டு என்றும் பல மொழிகளில் பேசுபவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

ஆவுஸ்திரேலியா போன்ற பல நாடுகள் பல் கலாச்சாரத்தை ஊக்குவிப்பதன் முக்கிய காரணம், தான் யார் என்று தன்னை தன் இனத்துடன் அடையாளம் காணும் ஒருவனே, புலம்பெயர்ந்த நாட்டில் ஒரு நல்ல பிரஜையாக வாழ்வான் என்பதே ஆகும்.

நான் இன்று தமிழ் கற்பதற்க்குக் காரணம் நான் ஒரு தமிழன் என்று கூறி, அமிழ்தினும் இனிய நம் தாய் மொழியாம் தமிழ் மொழியைப் பேசி, தமிழ்ப் பண்பாட்டைக் கடைப்பிடித்து, என்னை அடையாளம் கண்டுகொள்வதற்காகவே. நான் ஆங்கில மோகத்தில் மேற்கத்திய நாகரீகத்தில் கலந்து விடாது இருப்பதற்காகவே.

நான் தமிழன் என்று கூறிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன். என் தமிழ் மொழியறிவு தமிழின் அரிய பொக்கிஷங்களான தமிழ் இலக்கிய நூல்கள், பாடல்கள், நாடகங்கள், திரைப்படங்கள் மூலம் என் அறிவை வளர்க்க உதவும். மற்றும் தமிழர் வரலாற்றை முற்றுமுழுதாக வாசித்தறிய உதவும். நம் உறவினருடனும், நம் சமூகத்துடனும், நம் மொழியில் பேசி ஒன்றுபட்டு வாழ உதவும்.

செம்மொழி என்று பெருமை பெற்ற அழகிய நம் தாய்மொழியை, அடுத்த பரம்பரைக்கு எடுத்துச் செல்ல, பல நாடுகளிலும் வாழும் தமிழர்களாகிய நாங்கள் மொழியினால் ஒன்றுபட்டு உயர்வோமாக.

தமிழில் பேசுவோம், தமிழராய் வாழ்வோம்.

நன்றி, வணக்கம்.